[1978 செப்டம்பர் 12]

கூட்டுறவுச் சங்கக் கணக்குகள் தணிக்கை.

* வினு எண் 154—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கோவாப்பரேடிவ் சொசைட்டிகளை ஆடிட் செய்வதற்காக தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்வில் உள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கான தணிக்கைக் கட்டணம்.

* வினு எண் 155.—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு ஆண்டு தணிக்கை கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு முதல்?

(இ) அதனுல் அரசுக்கு ஆண்டுக்கு எவ்வளவு ரூபாய் இழப்பு ஏற்படுகிறது?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) 1963-64-ம் ஆண்டு முதல் விவசாயக் கடன் சங்கங்களுக்குத் தணிக்கைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(இ) 1976-77-ம் ஆண்டிற்கு மட்டும் ரூ. 11.13 இலட்சமாக இருக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS